**தலைப்பு – 162 மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்ககூற்று என்பன மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு விடயவெல்லை

---

தலைப்பு 162 – மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்படவுள்ளது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி அறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.13 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 127 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதி 127 பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|---|
| **நிதி ஒழுங்குவிதி** | | | |
| 127 (1)(அ) | சரியாகவும் நிதி சம்பந்தமான ஒழுங்கு நெறிப்படியும் நடைபெறுமாறு திணைக்கள நிதி சம்பந்தமான வேலைகளைத் திட்டமிட்டிருத்தல் | 1. நோக்குகை மற்றும் செயற்பணி மூலம் கடமைப் பொறுப்புகள் விபரிக்கப்படாமை | 2.1 |
| | | 2. செயற்றிட்டத்தின் குறைப்பாடுகள் | 2.2.1 |
| 127(1) (ஆ) | செலவினங்கள் மற்றும் அரசிறை சேகரிப்புகள் தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் ஒரு முறையை தயாரித்திருத்தல். | 1. பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கல் | 2.8 |
| | | 2. முகாமைத்துவ குறைப்பாடுகள் | 2.10 |
| | | 3. இணங்காமை | 2.12 |
| | | 4. மனித வள முகாமைத்துவத்தின் குறைப்பாடுகள் | 2.13 |
| 127(2) | தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள திணைக்களங்களில் நடப்புச் செலவினங்களும் புதிய அல்லது அதிகரித்த செலவுகளுக்குரிய உத்தேசங்களும் அவற்றின் சிக்கனமும் திறமையும் சம்பந்தமாக குறித்த அமைச்சில் நுண்ணித்தாக ஆராயப்படுகின்றன. | 1. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை அடைந்து கொள்ளாமை | 2.2.2 |
| | | 2. எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்ளாமை | 2.2.3 |
| | | 3. கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் | 2.2.4 |

| | | | |
|---|---|---|---|
| | | 4. நிதி விடுவிக்கப்பட்டிரு -ப்பினும், முன்னேற்றம் இல்லாத கருத்திட்டங்கள் | 2.2.5 |
| | | 5. கால தாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் | 2.2.6 |
| | | 6. வெளிநாட்டு கருத்திட்டங்களில் செயலாற்றுகை | 2.3(அ) |
| | | 7. வெளிநாட்டு கருத்திட்டங்களில் நிதி உபயோகப்படுத்தாது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைத்தல் | 2.3(ஆ) |
| | | 8. வெளிநாட்டு கருத்திட்டங்களை உரிய திகதியில் ஆரம்பிக்கப்படாமை | 2.3(இ) |
| | | 9. வெளிநாட்டு கருத்திட்டங்களை ஒழித்துக்கட்டுதல் | 2.3(ஈ) |
| | | 10. பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதில் குறைப்பாடுகள் | 2.4 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் யாவும், அவர் தனக்கே உரியதான நிருவாக அனுபவத்தையும் பகுத்தாய்வு அறிவினையும்கொண்டு அவற்றில் பிரயோகிப்பதற்கென அவருக்கு விடப்படும் முறையினை ஏற்பாடு செய்திருத்தல். | 1. வாகன உபயோகத்தின் குறைப்பாடுகள் | 2.5.1 |
| | | 2. பயனற்ற மற்றும் குறைப் பயன்பாட்டு சொத்துக்கள் | 2.5.2 |
| | | 3. வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்வதில் குறைப்பாடுகள் | 2.5.3 |
| | | 4. வெளியக தரப்புகளிடம் வழங்கப்பட்டிருந்த சொத்துக்கள் | 2.5.4 |
| | | 5. தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள் | 2.9 |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தராலும் முறையே சமர்ப்பிக்கப்பட்டு அவற்றில் அவர் கையொப்பமிட முன்னர் அமைச்சில் பரிசோதிக்கப்படுகின்றன் மதீப்பீடுகளிலும் உண்மையான செலவுகளிலும் ஏற்பட்டுள்ள முக்கியமான வேறுபாடுகளை நுட்பமாய் அவரால் ஆராயப்படுகின்றன. | ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ளுதல் | 2.6 |
| 127(5) | திணைக்களங்களின் ஒதுக்கீடுகளுக்கும் செலவுகளுக்குமுள்ள முக்கியமான வேறுபாடுகளும் அமைச்சில் நுட்பமாய் பரிசோதிக்கப்படுகின்றன. | 1. ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகப் படுத்தாமை | 2.11(அ) |
| | | 2. மிகை ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்திருத்தல் | 2.11(ஆ) |
| 127(7) | உத்தியோகத்தர்களது/ பணியாளர்களது தாமதம், கவனையீனம், தவறு மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 103 தொடக்கம் 108 வரையிலான ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிக் கோவையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் கடைபிடிக்கப்பட்டு நிதி ஒழங்குவிதிகள் 156(1) இன் பிரகாரம் அத்தகைய இழப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்/பணியாளர்கள் மீது மிகை விதிப்பு விதிப்பதற்கும், பொறுப்பு கூறுவதற்கு எற்பாடுகள் அளிக்கப்பட்டிருப்பின் தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளிலிருந்து கணக்கீட்டு அலுவலர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். பிரதான கணக்கீட்டு<br><br>உத்தியோகத்தர் அரசாங்க கணக்குக் குழுவுக்கு முன் தோன்றி தான் பொறுப்பாகவுள்ள திணைக்களக் கணக்குகளை தனது கணக்கீட்டு | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.7 |

உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து விளக்கமளித்து, அவை முறையானவை எனவும் எடுத்துரைத்து அக்குழுவிற்கு உதவி செய்தலும் அவருடைய கடமையாகும்.

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 அமைச்சின் நோக்குகை மற்றும் செயற்பணி

அமைச்சின் நோக்குகை மற்றும் செயற்பணி ஊடாக நிறைவேற்றப்படும் கடமைப்பொறுப்புகளை விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 செயலாற்றுகை

#### 2.2.1 திட்டமிடல்

2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம், 2017 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைவாக மீளாய்விற்கான ஆண்டில் அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 28 பிரதான கடமைப் பொறுப்புகள் இருந்ததுடன், அமைச்சின்கீழ் தாபிக்கப்பட்ட 02 நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் 04 வெளிநாட்டு கருத்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டிருந்த செயற்றிட்டம் தொடர்பில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக வரவு செலவு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முதன்மை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டம் (Activity Plan), நடைமுறைப்படுத்திய கால அட்டவணை (Time Line) மற்றும் அந்தச் செயற்பாடுகளில் எதிர் பார்க்கப்பட்ட விளைவளவுகள்/ பலன் (Output/ Outcome) மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்படவில்லை.

(ஆ) முறையான திட்டமில்லாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் தந்திரோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ், யாழ்ப்பாண நகர அபிவிருத்தி கருத்திட்டத்தில் காணி சுவீகரித்தல் மற்றும் மீள குடியமர்த்தல் பணியின் பொருட்டு ரூபா. 335 மில்லியன் தொகைக்கு சமமான 2.17 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முறையான திட்டம் இல்லாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அந்த ஒதுக்கீட்டு தொகையில் ரூபா.44.72 மில்லியனுக்கு சமமான 0.29 மில்லியன் ஐ.அமெ. டொலர் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) அநுராதபுரம் இணைந்த நகர அபிவிருத்தி கருத்திட்டம்மூலம் கலாச்சார மற்றும் இயற்கை மரபுரிமைகளை பாதுகாத்துக்கொண்டு அநுராதபுர நகரத்தில் புராதன மற்றும் நவீனமயப்படுத்திய பிரதேசங்களுக்கிடையில் சமநிலை அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக ரூபா. 9,779.95 மில்லியனுக்கு சமமான 62.4 மில்லியன் யூரோ தொகையில் செலவு மதிப்பிடப்பட்டிருந்தது. அந்த மதிப்பிடப்பட்ட செலவில் ரூபா. 8,150 மில்லியனுக்கு சமமான 52 மில்லியன் யூரோ தொகை பிரான்ஸ் நாட்டு அபிவிருத்தி முகவர் நிறுவனத்தால் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இக் கருத்திட்டத்தின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 52.01 மில்லியன் அல்லது 0.33 மில்லியன் யூரோ செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும்

முழுமொத்த கருத்திட்டத்தின் காலம் உள்ளடங்கும் வகையில் செயற்றிட்டத்திற்கு அமைவாக வரவு செலவு அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று கருத்திட்டத்தின்கீழ் மேற்கொள்கின்ற சிவில் வேலைகளின் பொருட்டான விபரமான நிருமாணிப்பு திட்டம் தயாரிக்கும் தாமதம் காரணமாக மீளாய்விற்கான ஆண்டுக்காக பெறுகை திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்விற்கான ஆண்டில் செயற்றிட்டம்படி ''சுகித்த புரவர'' கருத்திட்டத்தின் முதலாவது, இரண்டாவது கட்டங்கள் மற்றும் புதிய கருத்திட்டங்களாக ரூபா. 1,750 மில்லியன் தொகையும், ரூபா.2,350 மில்லியன் தொகையும், மற்றும் ரூபா. 1,000 மில்லியன் தொகையும் என்ற வகையில் மொத்தம் ரூபா 5,100 உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. ''சுகித்த புரவர'' முதலாவது கட்டத்தின்கீழ் 64 கருத்திட்டங்களும், இரண்டாவது கட்டத்தின்கீழ் 47 கருத்திட்டங்களும், அதே போன்று 11 புதிய கருத்திட்டங்களும் என்ற வகையில் மொத்தம் 122 கருத்திட்டங்கள் பொருட்டு நகர உதவிக் கருவிகளும் திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ உதவிக் கருவிகளின்கீழ் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 81 கருத்திட்டங்களின் வேலைகள் முடிவுறுத்துவதற்கு இயலாதிருந்தது.

### 2.2.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டங்களை அடைந்துக்கொள்ளாமை

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(m) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய 243 நகர அபிவிருத்தி வலயங்களை அடையாளம் காணப்பட்டிருந்தது. 08 மாநகர சபை பிரதேசங்களும், 12 நகர சபை பிரதேசங்களும், 20 பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களும் என்ற வகையில் மொத்தம் 40 வலயங்களுக்கு மட்டும் அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(M) கொழும்பு தலை நகரம் சார்ந்து வெள்ளம் ஏற்பட்ட பின்னர் இயல்பு நிலையை அடையும் நகர சூழல் பொருட்டான பொறுப்பு நிதியத்தின்கீழ் சர்வதேச ஆலோசகர் நிறுவனம் மூலம் கொழும்பு தலைநகரம் சார்ந்து வெள்ளம் ஏற்படும் அபாய நிலைமையை குறைப்பதற்காக செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த திட்டமிடல் பெகேஜில் இலங்கைக்கு ஏற்புடையதான நிறுவனங்களில் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வுகளை நடாத்தி குறித்த செயற்றிட்டம் தயாரிப்பதற்கு தேவையான பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும், இலங்கையில் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், ஒழுங்குமுறையாகவும் முறையாகவும் மேற்கொள்ளாமை காரணமாக அதன் பொருட்டு செலவிடப்பட்ட பணத் தொகை பயனற்றதாகியது. ஆகையால் உரிய செயற்றிட்டம் தயாரிப்பதற்காக மீண்டும் மீண்டும் சர்வதேச ஆலோசனை கம்பெனிகளின் உதவி பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.

(,) மேல் மாகாண வலய மாநகர திட்டமிடல் கருத்திட்டம் பேணிச் செல்கின்ற கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தால் நிறைவேற்றுகின்ற கடமைப் பொறுப்புகளை இந்தக் கருத்திட்டம் மூலமும் நிறைவேற்றப்பட்டிருந்தது. மேல் மாகாண வலய மாநகர அதிகார சபை தாபிக்கும் சட்ட வரையுள் தயாரித்தல் மற்றும் அதற்கு காரணமாக அமையும் உள்ளூராட்சி சட்டதிட்டங்களை திருத்தம் செய்தல், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்தல், மற்றும் மேல் மாகாண அதிகார சபையின் கட்டமைவு தொடர்பாக முன் திட்டம் தயாரித்தல் இந்தக் கருத்திட்டங்களின் பிரதான நோக்கங்களாயினும், கருத்திட்டம், அந்த நோக்கங்களுக்கு புறம்பாக நடவடிக்கை மெற்கொண்டிருந்தது.

(ஈ) கொழும்பு தலைநகரம் சார்ந்து நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் நிருமாணிக்கப்பட்ட பெத்தகான உயிரியல் பல்வகை பூங்காவின் நிருமாணிப்பு நடவடிக்கைகள் உரிய தரநியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவில்லை. அளவீட்டுப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகள் அதிகமாக குறிப்பிடல் மற்றும் தரநியமங்களுக்கு ஒழுங்கமைவின்றி தயாரிக்கப்பட்டிருந்த பணிகளின் பொருட்டு செலுத்தல் மேற்கொள்வதற்காக ஒப்பந்தக்காரரிடம் ரூபா. 92.07 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மட்டக்குளி காக்கைத்தீவு கரையோர பூங்கா ரூபா. 275.78 மில்லியன் பெறுமதிக்கு 10 மாதங்களுக்குள் நிருமாணிப்பதற்காக, ஒப்பந்தக்காரர்களுடன் கொழும்பு தலைநகரம் சார்ந்து நகர அபிவிருத்தி கருத்திட்டம் (MCUPP) உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. ஆயினும் கருத்திட்டம் முடிவுறுத்துவதற்கு 1½ ஆண்டு காலத்திற்கு மேலதிகமான காலம் எடுக்கப்பட்டிருந்தது. கருத்திட்டத்தின் சில உருப்படிகள் பொறியியல் திட்டம்படி நிருமாணிக்கப்படவில்லை என்பதுடன், உரிய தரநியமங்களுக்கமைவாக மேற்கொள்ளப்படாத 47 குறைப்பாடுகள் காணப்பட்டன. அந்தக் குறைப்பாடுகள் தொடர்பாக கவனத்தல் கொள்ளாது பூங்காவை கையேற்கப்பட்டிருந்ததுடன், அந்தக் குறைப்பாடுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாது ஒப்பந்தக்காரரிடம் ரூபா.129.14 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) அயிகொனிக் கட்டிடம் நிருமாணித்தல், ஊருபொக்க நகர அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் அம்பாந்தோட்டை சிறிபோபுர வர்த்தக மற்றும் கரையோர பூங்கா என்பவற்றை நிருமாணிப்பதற்கு மீளாய்விற்கான ஆண்டில் குறைநிரப்பு மதிப்பீடுகள்மூலம் ரூபா.607.98 மில்லியன் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்விற்றான ஆண்டு இறுதியில் நிருமாணிப்பு நடவடிக்கைகளின் பௌதீக அல்லது நிதிசார் முன்னேற்றம் அடைந்துக்கொள்ளவில்லை.

(எ) தொழில்நுட்ப நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் மாலம்பே, ஹோமாகம, கடுவளை மற்றும் அத்துருகிரிய ஆகிய நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரேரணை செய்யப்பட்டிருந்தது. அதன்படி மூன்றாம்நிலை கல்வி வலயம், விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வலயம், தொழில்நுட்ப தொழில்முயற்சி வலயம், நெனோ தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்ப காட்சிக்கூட வலயம் என்ற வகையில் 05 பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அந்தக் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 மார்ச் 01 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு உரியதாக இருந்தது. கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சு மற்றும் கோரியா நாட்டு அரசாங்கத்தின் காணி உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை 2016 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன்படி தொழில்நுட்ப நகர பாரிய திட்டம் மற்றும் அதற்கு ஏற்புடையதான சாத்தியவள ஆய்வினை மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் கோரியா நாட்டு அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும், தொழில்நுட்ப நகர கருத்திட்டம் பொருட்டு தாபிக்கப்பட்டிருந்த கருத்திட்ட முகாமைத்துவ பிரிவின் பணியாற்தொகுதிக்கு மீளாய்வாண்டின் இறுதியில் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா. 16.64 மில்லியன் அடங்கலாக ரூபா.25.49 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கருத்திட்டம் மிக மெதுவாக நடைமுறைப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளை (Outcome) அடைந்துக்கொள்ளாமை

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் பொது போக்குவரத்து பொருட்டு பேருந்து சேவைகளை மேம்படுத்தும் கருத்திட்டத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடுகளை ஒதுக்கீடு செய்வதன்மூலம் ரூபா. 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டு இறுதியில் ரூபா. 104.04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதேபோன்று ஆண்டு இறுதியில் கருத்திட்டம் பொருட்டு ரூபா.131.33 மில்லியன் தொகையிலான பொறுப்புகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஆண்டு இறுதியில் மொத்தம் ரூபா.235.37 மில்லியன் பெறுமதியிலான வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்தக் கருத்திட்டம்மூலம் மீளாய்விற்கான ஆண்டில் பொது போக்குவரத்து சேவையினை மேம்படுத்துவதற்காக முதன்மை பேருந்து ஓடுபாதைகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியிருந்தது. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் பொது மக்களை அறிவுறுத்துவதற்கு, பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கு, பேருந்து ஓடுபாதைகளை அடையாளமிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டில் மேற்படி பணத்தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் ஒரு திசையை நோக்கி ஆகக் குறைந்தது. 03 ஓடுபாதைகள் உள்ளவிடத்து மட்டும் முதன்மை ஓடுபாதை ஒதுக்குவதற்கு முடியுமாதல், பெரும்பாலான வீதிகளில் 03 ஓடுபாதைகள் இல்லாதிருத்தல், முதன்மை பேருந்து ஓடுபாதைகளில் மோட்டார் சைக்கிள், லொறி மற்றும் கார் வண்டிகளை உட்புகுத்தல் காரணமாக இந்தக் கருத்திட்டத்தின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் செலவிடப்பட்ட தொகை பயனற்றதாகியது.

(ஆ) மேல் மாகாண வலயத்தில் மாநகர திட்டமிடல் கருத்திட்டம் 2015 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அது 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் இறுதியாகும்போது 02 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதி நடைமுறைப்பட்டது. எவ்வாறெனிலும், கருத்திட்டம் இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சுடன் 2003, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்பட்டது. அந்த இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதியில் கருத்திட்டம் பொருட்டு ரூபா. 79.85 மில்லியன் செலவிட்டிருந்தது. குறித்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 2015 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ரூபா. 250.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி கருத்திட்டம் பொருட்டு ரூபா. 330.23 மில்லியன் திரண்ட செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது மேல் மாகாண வலய மாநகர திட்டமிடல் கருத்திட்டம் முடிவுறுத்தப்பட வேண்டிய காலவெல்லை குறிப்பிடப்படாது, மேலும் கருத்திட்டப் பெயரை மாற்றி மேற்கொண்டு பேணிச் செல்வதனை அவதானிக்கப்பட்டது.

(இ) கொழும்பு தலைநகரம் சிறந்த சுற்றாடல் நேயத்துடன்கூடியதாகவும் அலங்காரப்படுத்துவதற்காகவும் கொழும்பு தலைநகரம் சார்ந்து நகர அபிவிருத்தி கருத்திட்டங்கள் மூலம் பேரே வெவ அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு அலுவல்களின் பொருட்டு ரூபா. 1,552.07 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. திறைசேரி நிதியங்கள் மூலம் மேலும் ரூபா. 470 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பேரே வெவ சார்ந்துள்ள வீடுகள் மற்றும் ஹோட்டல்களில் கழிவுப் பொருட்களை பேரே வெவையுடன் கலக்கப்படுவதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக பேரே வெவ சுற்றிவர துர்நாற்றம் வீசியதுடன், பேரே வெவயின் அபிவிருத்தி நடவடிக்கைகள் சுற்றுலா வியாபாரத்திற்கும், இலங்கைவாழ் மக்கள் ஓய்வினை கழிப்பதற்கும் ஏற்ற வகையிலான சூழலாக உருவாக்கப்படவில்லை.

(ஈ) மைத்திரி ஆட்சி நிலையான நாடு என்ற தொனிப்பொருளின் கீழ் அமைச்சு மூலம் மேல் மகாாணத்தில் எதிர்வரும் தசாப்தத்தில் பண்புள்ள சமுதாயத்தை

உருவாக்கும் ஆன்மீக நிகழ்ச்சித்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 04 விகாரைகளில் வசதிகளை மேம்படுத்துவதற்காக நன்கொடை அடிப்படையில் மதிப்பிடப்பட்டிருந்த செலவு ரூபா. 64.22 மில்லியன் தொகையில் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்காக முற்பணக் காப்புறுதி பிணை பெற்றுக்கொள்ளாது வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூபா.7.76 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும், ஒரு நிருமாணிப்பு பணியில் கட்டுமான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு உரிய திகதியில், பல மாதங்கள் சென்றிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையால் வழங்கியிருந்த வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணங்களில் ரூபா.1,238,109 ஐ வேறு நிருமாணிப்பு அலுவல்களுக்கான 02 இரசீதுகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதேபோன்று ''மெத்சித் அரண'' கருத்திட்டத்தின்கீழ் விகாரைகளின் வசதிகளை மேம்படுத்துவதற்காக ''சுகித்த புரவர'' கருத்திட்டத்தின்கீழ் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்திருந்ததுடன், இந்தக் கருத்திட்டத்தில் நடவடிக்கைகள் மிக மெதுவாக நடைமுறைப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கருத்திட்டங்களை நிறைவேற்றும் தாமதங்கள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ஒப்பந்தக்காரர்களின் ஆற்றல்கள், செயலாற்றுகை என்பவற்றை கவனத்தில் கொள்ளாது மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் கண்டி டொமிலின் பூங்காவை மேம்படுத்தும் ஒப்பந்தம் பொருட்டு வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூபா. 58.82 மில்லியன் தொகையினை 02 தவணைகளின்கீழ் செலுத்தப்பட்டிருந்தது. அதேபோன்று ஒப்பந்தத்திற்கு ஏற்புடையதான அடிப்படை நிருமாணிப்பு திட்டங்களில் குறைப்பாடுகள் காரணமாக ரூபா. 27 மில்லியன் தொகை மேலதிகமாக செலவிட நேரிட்டுள்ளதுடன், ஒப்பந்தக் காலமும் மேலும் 03 ½ மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்து.

(ஆ) திருகோணமலை மாவட்டத்தில் விவசாய, வலுசக்தி மற்றும் சுற்றுலாத்துறை கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கத்துடன், மாநகர திட்டம் தயாரிக்கும் கருத்திட்டம் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுமூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக பெறுகை நடவடிக்கை பின்பற்றாது சிங்கப்பூரில் ஆலோசனை கம்பெனி தெரிவு செய்யப்பட்டிருந்தது. திருகோணமலை மாவட்டத்தின் பாரிய திட்டம் தயாரிப்பதற்காக 982,000 ஐ.அமெ.டொலர் தொகை வழங்குவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கை பிரகாரம் 09 மாதங்களுக்குள் திட்டமிடல் அறிக்கை கையளிக்க வேண்டியிருந்தது. அதேபோன்று மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 589,200 ஐ.அ.டொலர் அல்லது இலங்கை ரூபா. 90.29 மில்லியன் தொகைக்கு சமமான தொகையினை 03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருப்பினும், 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் இறுதியிலும், திருகோணமலை மாவட்ட பாரிய திட்டம் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்படவில்லை. இந்த ஆலோசனை கம்பெனிமூலம் உடன்படிக்கை பிரகாரம் 09 மாத காலப் பகுதிக்குள் திட்டம் தயாரிப்பதற்கு தவறியதன் காணரமாக அவ்வப்போது அமைச்சரவை அனுமதிமூலம் மேற்படி பணியை நிறைவு செய்வதற்கு மேலும் 08 மாத காலம் நீடிக்கப்பட்டிருந்தது. ஆயினும், குறித்த காலப்பகுதிக்குள் திட்டமிடல் அறிக்கை தயாரித்து முடிவுறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட சிங்கப்பூர் கம்பெனி தவறியிருந்தது. அதன் காரணமாக அந்தக் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு உரியதாக இருப்பினும், 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதியிலும் பணியாற்றொகுதியினறுக்கு சம்பளம் செலுத்தப்பட்டு கருத்திட்டம் பேணிச் செல்ல வேண்டி இருந்தது.

(இ) மீளாய்விற்கான ஆண்டில் கொட்டாவ மாகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்தில் பேருந்து வண்டிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கை நிலையம் தாபிப்பதற்காக, எல்லா தனியார் பேருந்து வண்டிகளிலும் (GPRS) பொருத்தப்பட்டு பேருந்து வண்டிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கை நிலையம் ஆரம்பிப்பதற்கு ரூபா.20 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதயிலும் பேருந்து வண்டிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கை நிலையம் தாபிப்பதற்கு அல்லது பேருந்து வண்டிகளில் (GPRS) இயந்திரங்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேல் மகாாண மாநகர திட்டக் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் 2017 யூலை இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் ஆகிய மாதங்களில் அந்தக் கருத்திட்டத்தின் பணியாற்தொகுதியின் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகள் மேற்கொள்ளப்பட்டு கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அந்த இரண்டு மாத காலங்களின் பொருட்டு ரூபா 13.08 மில்லியன் தொகையிலான திறைசேரி ஒதுக்கீடு பயன்படுத்தியிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம்படி அந்தக் கருத்திட்டத்தின் மிகுதி எல்லா நடவடிக்கைகளும் மேல்மாகாண வலய திட்டமிடல் கருத்திட்டம் என்ற பெயரில் புதிய கருத்திட்டம் ஆரம்பித்து நிறவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) கொழும்பு நீரேந்துப் பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதை குறைக்கப்படுதல் மற்றும் கொழும்பு தலைநகரப் பிரதேசத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களில் கொள்ளளவை வலுவூட்டல், கொழும்பு நகரத்தை அலங்காரப்படுத்தல் என்பவற்றை நோக்கமாகக்கொண்டு கொழும்பு தலை நகரம் சார்ந்து நகர அவிருத்தி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரூபா. 42,031.44 மில்லியனுக்கு சமமான 321 மில்லியன் ஐ.அமெ.டொலர் தொகைக்கு குறைவாக இருந்தது. அதில் 213 மில்லியன் ஐ.அமெ.டொலர் அல்லது 66.35% தொகை புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான சர்வதேச வங்கியும், எஞ்சிய தொகை இலங்கை அரசாங்கத்தாலும் செலவிடுவதற்கு அமைவாக இந்தக் கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு யூலை 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு யூன் 30 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு உரியதாக இருந்தது. ஆயினும், 2020 ஆம் ஆண்டு யூன் 30 ஆந் திகதி வரை கருத்திட்டத்தின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும், 2017 ஆம் ஆண்டு இறுதியில் உலக வங்கி கடன் திட்டத்தின்கீழான நிதியத்திலிருந்து ரூபா. 12,198 மில்லியன் தொகைக்கு சமமான 87.7 மில்லியன் ஐ.அமெ.டொலர் தொகை உபயோகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக இலங்கை அரசாங்கத்தின் நிதியத்தில் ரூபா. 3,691 மில்லியன் அல்லது 25.7 மில்லியன் ஐ.அமெ.டொலர் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தி 05 ½ ஆண்டுகளுக்கு பின்னர் 41% இற்கு அண்மித்த அளவை மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மாத்தறை, வனாத்தவில்லுவ, இரத்தினபுரி மற்றும் புவக்பிட்டிய வராகொட கொன்கிதொட்டை ஆகிய பிரதேசங்களில் நகர அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக ரூபா. 202.02 மில்லியன் தொகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருப்பினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அந்தக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(எ) 2017 ஆண்டில் பாதுக்கை விளையாட்டு மைதானம், காலவத்தை காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் புளத்சிங்கள சந்தை நிருமாணித்தல் ஆகிய 03 நிருமாணிப்பு பணிகளின் பொருட்டு செயற்றிட்டம்படி ரூபா. 53.24 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் நிருமாணிப்பு நடவடிக்கைகள்

ஆரம்பிப்பதற்கு முன்னர் தாமதப்படுத்தியிருந்த வேலைகளை முடிவுறுத்துவதற்கு உரிய திகதிகள் கடந்திருப்பினும், குறித்த நிருமாணிப்பு பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆகையால் அந்த நிருமாணிப்புகள் மூலம் அந்தந்த பிரதேசங்களில் மக்களுக்கு கிடைக்கப்பெற வேண்டியிருந்த நலன்களை பெற்றுக்கொள்வதற்கு 02 ஆண்டுகள் தாமதமாகியிருந்தன.

### 2.2.5 பணம் விடுவிக்கப்ட்டிருப்பினும் முன்னேற்றம் காணப்படாத கருத்திட்டங்கள்

மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் கண்டி நகர அபிவிருத்தி கருத்திட்டத்தில் பொது வைத்தியசாலை தர்மாசோக மாவத்தை மற்றும் கட்டுகஸ்தொட்டை, மடவல, திகன வீதி ஆகிய இரண்டு ஒப்பந்தங்களில் பொறியியலாளர்களின் மதிப்பீடு ஒழுங்கு முறையாக ரூபா. 911 மில்லியன் மற்றும் ரூபா.2,156 மில்லியன் ஆகும். ஆயினும் குறித்த ஒப்பந்தங்கள் முறையாக ரூபா. 727 மில்லியன் மற்றும் ரூபா. 1,615 மில்லியனாக குறைந்த பெறுமதிக்கு அளிக்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தங்களில் செலவு மற்றும் ஒப்பந்தம் அளிப்புகளில் பெறுமதி என்பவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க போதியளவிலான ஏற்றத்தாழ்வுகள் நிலவிய போதும், அது தொடர்பாக தகவல்களை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. அதேபோன்று மேற்படி இரண்டு ஒப்பந்தங்களின் பொருட்டும் மொத்தம் ரூபா.351 மில்லியன் பெறுமதியிலான வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணம் இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் விடுவிக்கப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் 30% குறைந்த முன்னேற்றம் அடைந்திருந்தமையால் வழங்கியுள்ள முற்பணத் தொகையினை மீள அறவிட முடியவில்லை.

### 2.2.6 கால தாமதத்தின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் கண்டி நகர சபையின் வாகன தரிப்பிடம் மேம்படுத்தும் ஒப்பந்தத்தின் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் மற்றும் ஒப்பந்தம் அளிக்கும் கடிதம் வழங்குவதற்கு முன்னர் வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூபா.49 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆந் திகதியிலும் ஒப்பந்தத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

## 2.3 வெளிநாட்டுதவி கருத்திட்டங்கள்

மீளாய்விற்கான ஆண்டில் அமைச்சினால் 05 வெளிநாட்டுதவி கருத்திட்டங்களின் பொருட்டு ரூபா. 8,044.1 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அதில் ரூபா. 6,044.0 மில்லியன் தொகை உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் ரூபா. 2000.1 மில்லியன் ஒதுக்கீடு எஞ்சியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வெளிநாட்டுதவி கருத்திட்டங்களின் செயலாற்றுகை

மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டங்களின் பொருட்டு கடன் வழங்குகின்ற முகவர் நிறுவனங்களால் ஒதுக்கப்படும் ரூபா. 27,507 மில்லியன் தொகைக்கு சமமான 202 மில்லியன் ஐ.அமெ.டொலர் நிதி வழங்கப்- பட்டிருந்தது. மொத்த நிதியத்தில் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 03 ½ ஆண்டுகளிலான காலம் முடிவடைந்திருப்பினும், வழங்கியுள்ள வெளிநாட்டு நிதிகளில் ரூபா 3,431.72 மில்லியன் அல்லது 12% ஆன நிதி உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில், கருத்திட்டத்தின் செயலாற்றுகை மிக குறைந்த மட்டத்தில் இருந்தது. கருத்திட்டத்தின் செயற்றிட்டம் மாதாந்த காலாண்டு மற்றும் அரையாண்டு என்ற வகையில் ஒதுக்கிக்கொண்டு தயாரித்து அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக கருத்திட்டத்தின் நிதியம் எஞ்சுவதன்மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) **கருத்திட்டத்தின் நிதி உபயோகப்படுத்தாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்தல்**

மூலோபாய நகர அபவிருத்தி கருத்திட்ட நடவடிக்கைகளில் குறைந்த முன்னேற்றம் மற்றும் நிதிசார் தேவைப்பாடுகள் தொடர்பாக மேற்கொண்ட பலவீனமான எதிர்வுகூறல் காரணமாக ரூபா. 634.5 மில்லியன் தொகைக்கு சமமான 4.26 மில்லியன் ஐ.அமெ.டொலர் தொகை கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் பொருட்டு உபயோகப்படுத்தாது 06 மாதங்களுக்கு அதிகமான காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) கருத்திட்டம் உரிய திகதியில் ஆரம்பிக்கப்படாமை

மீளாய்வாண்டில் மூலோபாய நகர அபவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் புனரமைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு 87 ஒப்பந்தங்களுக்கு மொத்தம் ரூபா. 19,623 மில்லியன் தொகை அல்லது 131 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த 87 ஒப்பந்தங்களின் மதிப்பீட்டு செலவுபடி ஒப்பந்தக்காரர்களிடம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா. 8,289 மில்லியன் தொகை அல்லது 55.34 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியிலான 34 ஒப்பந்தங்களை மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும், 25 உப கருத்திட்டங்களின் நடவடிக்கைகள் பொருட்டு ரூபா.1,065 மில்லியன் தொகை, செலவு மீது வழங்கப்பட்டிருப்பினும் அந்த நடவடிக்கைகள் உரிய திகதியில் ஆரம்பிக்கப்படவில்லை.

(ஈ) வெளிநாட்டு கருத்திட்டங்களை முடிவுறுத்தல்

பாரியகொழும்பு போக்குவரத்து வலையமைப்புகளை மேம்படுத்தம் கருத்திட்டத்தின்கீழ் உபஆக்கக்கூறுகளாக கொட்டாவ, கடுவளை மற்றும் கடவத்த நகர அபிவிருத்தி கருத்திட்டம் Township Development Component (3K கருத்திட்டம்) ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கை பிரகாரம் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி கருத்திட்டம் முடிவுறுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறெனிலும், கருத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அலுவல்களை உரிய காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு தவறியதன் காரணமாக கடன் தொகை பெற்றுக்கொள்ளாது, திறைசேரி ஒதுக்கீடுகளின்மீது மீளாய்விற்கான ஆண்டில் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. அதன்படி உரிய காலப்பகுதிக்குள் கருத்திட்டம் முடிவுறுத்தாமை காரணமாக பணியாற்தொகுதியினறுக்கு மாதமொன்றுக்கு நிருவாக செலவு (சம்பளம் மற்றும் ஏனைய செலவுகள்) அண்ணளவாக ரூபா. 1.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா.43.4 மில்லியன் தொகை நிருவாக செலவாக மேற்கொண்டிருப்பினும், அந்தச் செலவு பயனற்றதாகியது.

## 2.4 பெறுகை நடைமுறை மூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்

அமைச்சினால் வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகள்மூலம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் ரூபா. 13.16 மில்லியன் ஒதுக்கீடு அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை பின்பற்றி உபயோகப்படுத்தப்பட்டி- ருந்தது. அதில் ரூபா. 11.4 மில்லியன் தொகையிலான ஒதுக்கீடு உபயோகப்- படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் 8.1 பந்தி பிரகாரம், நிதி உடன்படிக்கையில் மற்றும் அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைவாக

ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டியிருந்தது. அந்த ஏற்பாடுகளை பின்பற்றாது 11 ஆலோசகர்களை மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக மொத்தம் ரூபா.36 மில்லியன் தொகை மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் பொருட்டு பெறுகை திட்டம் தயாரிக்கப்படாமை காரணமாக ரூபா. 44.33 மில்லியன் ஐக்கிய அமெரிக்கா டொலர் தொகையிலான மதிப்பிடப்பட்ட செலவின்கீழ் மீளாய்விற்கான ஆண்டில் முடிவுறுத்தப்பட வேண்டிய 105 பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு கருத்திட்டம் தவறியிருந்தது.

(இ) கெட்டம்பே நீர் துப்பரவு இயந்திரகூடத்தின் புனரமைக்கும் ஒப்பந்தம் ரூபா.899 மில்லியன் தொகைக்கு வழங்கிய பின்னர் ஒப்பந்தக்காரரின் தகவுத்திறன் மற்றும் தகைமைகள் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக மீண்டும் விலை கேள்விகளை கோருவதற்கு பெறுகை மேன்முறையீட்டு குழு தீர்மானித்திருந்தது. அந்த பணியின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த நிதி வசதிகள், கடன் வழங்கும் முகவர் நிறுவனத்தால் முற்று முழுதாக பதிவழிக்கப்பட்டிருந்தமையால் கெட்டம்பே நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் துப்பரவேற்பாடு அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

(இ) கண்டி மழை நீர் வழிந்தோடும் வடிகால் முறைமையினை ரூபா. 950 மில்லியன் தொகை மதிப்பீடுகள்படி நிருமாணிக்கும் ஒப்பந்தத்தின் பெறுகை நடவடிக்கைகளை 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்விற்ான ஆண்டு இறுதியிலும், அதன் பெறுகை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாமையால் எதுவித செயலாற்றுகையும் ஏற்படவில்லை.

(உ) கொழும்பு தலைநகரம் சார்ந்து வெள்ளம் ஏற்பட்ட பின்னர் இயல்பு நிலைக்கு வருகின்ற நகர சூழல் பொருட்டான பொறுப்பு நிதியத்தின்கீழ் நடைமுறைப்படுத்திய வெள்ளம் ஏற்படும் அபாயத்தை மதிப்பிடல் தொடர்பான செயற்றிட்டம் தயாரிப்பதற்கான ஆலோசனை சேவை பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடையதான பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக 02 ஆண்டுகளும் 04 மாதங்களும் சென்றிருந்தன. அதேபோன்று கொழும்பு தலைநகரம் சாரந்த பிரதேசங்களில் உள்ளக நீர்வழிகள் மற்றும் குளங்களில் தரத்தினை மதிப்பிடுதல், ஈர வலயங்களை முகாமைத்துவம் செய்யும் திட்டங்களை தயாரிப்பதற்கு ஏற்புடையதாக ஆலோசனை சேவையின் பொருட்டு பெறுகை நடவடிக்கைகளுக்கு ஓராண்டுக்கு அதிகமான காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) கொழும்பு தலைநகரம் சார்ந்து வெள்ளம் ஏற்பட்ட பின்னர் இயல்பு நிலைக்கு உள்ளாகும் நகர சூழல் பொருட்டான பெறுப்பு நிதியம்மூலம் வெள்ளம் ஏற்படும் அபாயத்தை மதிப்பிடுதல் மற்றும் வெள்ளப்ம் ஏற்படும் அபாயத்தினை குறைக்கப்படுதல் தொடர்பாக செயற்றிட்டம் தயாரிப்பதற்கு ஆலோசனை கம்பெனி தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன். விலைகோரல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த விலைகோரல் மதிப்பீடுகளின்படி முதலாவது இடத்தில் ISO 9002 என்ற சர்வதேச தரநியம சான்றிதழை பெற்றிருந்த, அதிகூடிய தகைமைகளுடன்கூடிய பணிற்றொகுதியினர் உள்ள, சர்வதேச ஆலோசனை நிறுவனத்தை தெரிவு செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டிருந்த ஆலோசனை நிறுவனத்திடம் ஒப்பந்தம் வழங்குதல் காரணமாக ரூபா. 9.72 மில்லியன் தொகை ஆலோசனை கட்டணமாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. குறித்த ஆலோசனை கம்பெனி பொருட்டு 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் 2016 ஆம் ஆண்டு சனவரி 18 ஆந் திகதி வரையிலான காலப் பகுதியில் 03 சந்தர்ப்பங்களில் அறிக்கை சமர்ப்பிக்கும் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை காணரமாக நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------

### 2.5.1 வாகனங்களின் உபயோகம்

------------------------------------------

மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அமைச்சின் பல்வேறு வகையிலான 35 வாகனங்கள் இருந்ததுடன், அந்த வாகனங்கள் கிலோ மீற்றர் 535,729 ஓடியிருந்தன. அதற்கு எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் பொருட்டு ரூபா. 1.16 மில்லியன் தொகையும், வாகனங்களின் சர்விஸ் பொருட்டு ரூபா. 3.11 மில்லியன் தொகையும், வாகனங்களின் பழுதுபார்த்தல் பொருட்டு ரூபா. 2.45 மில்லியன் தொகையும், வாகனங்களின் காப்புறுதி பொருட்டு ரூபா. 2.67 மில்லியன் தொகையும், என்ற வகையில் மொத்தம் ரூபா. 9.39 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி அமைச்சினால் வாகனங்களின் ஓட்டம் பொருட்டு சாரதி சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா.17.53 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டங்களின் பொருட்டு வாடகை அடிப்படையின்மீது மாதமொன்றுக்கு ஆகக்கூடியதாக 2500 கிலோ மீற்றர் தூரம் ஓடக்கூடியதாக மோட்டார் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. சில வாகனங்கள் கிலோ மீற்றர் 75,249 ஆன உரிய தூரத்திற்கும் குறைவாக ஓடியுள்ளபோது, கிலோ மீற்றர் 133,841 ஆன உரிய தூரத்திற்கும் அதிகமாக ஓடியிருந்ததன் காரணமாக கருத்திட்டம் மூலம் ரூபா. 7.15 மில்லியன் தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு தலை நகரம் சாரந்து அபிவிருத்தி கருத்திட்டங்களின் அலுவல்களுக்கு 07 வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்தன. மேலும் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் பொருட்டு வாடகை அடிப்படையில் 05 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், குறித்த வாடகை வண்டிகளின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 5.58 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. கருத்திட்டத்தின் அலுவலர்களுக்கு வாகனங்களை ஒதுக்கியதன் காரணமாக, கருத்திட்டத்தின் நடவடிக்கைகளின் பொருட்டு வாகனங்கள் போதுமற்றதாகியது. ஆகையால் வாடகை அடிப்படையின்மீது வாகனங்களை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. வாடகை அடிப்படையின்மீது வாகனங்களை பெற்றுக்கொள்ளுதல் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் வாகனங்களின் மாதாந்த ஓட்டம் கிலோ மீற்றர் 785 இருந்து கிலோ மீற்றர் 1,362 வரையிலான எல்லையினைக் கொண்டிருந்தது. அதேபோன்று நாளொன்றுக்கு ஓட்டத்தில் பொதுவான கிலோ மீற்றர் 32 தொடக்கம் 57 கிலோ மீற்றர் வரை குறைவான எல்லைக்குள் இருந்தது.

### 2.5.2 பயனற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்.

--------------------------------------------------------------

மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 195 மில்லியன் செலவிடப்பட்டு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கண்டி மற்றும் காலி மாநகர சபைகளுக்கும் நீர்ப்பாசன திணைக்களத்திடமும் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களை உபயோகப்படுத்தும் திட்டம் இருக்காமையால் சொத்துக்களை கொள்வனவு செய்யப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தாது 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆந் திகதியிலும் கையளிக்கப்பட்டிருந்த நிறுவனங்களில் குறை பயன்பாட்டு சொத்துகளாக இருந்தன. மேலும் ரூபா.120 மில்லியன் செலவில் கடந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர் குழாய்கள் மற்றும் துணைக் கருவிகள் 2018 ஆம் அண்டு ஏப்ரல் மாதம் இறுதியிலும் பயன்படுத்தாது நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் வலாகத்தில் பயனற்றதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 2.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

மேல்மாகாண வலய மாநகர திட்டமிடல் கருத்திட்ட அலுவலகங்களின் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபை நிதியம் மூலம் அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற திறைசேரி நிதித் தொகையினையும் பயன்படுத்தி ரூபா. 8.75 மில்லியன் பெறுமதியான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் குறித்த நிலையான சொத்துக்களை அட்டவணைப்படுத்தியிருக்கவில்லை என்பதுடன், குறித்த பொருட்கள் தொடர்பில் கடந்த ஆண்டிலும் மீளாய்விற்கான ஆண்டிலும் வருடாந்த பொருள் மெய்மையாய்வுகளை மேற்கொள்ளவில்லை.

### 2.5.4 வெளியக தரப்புகளின் பொருட்டு வழங்கியிருந்த சொத்துக்கள்

அமைச்சினால் சில சொத்துக்களை முறையின்றி வெளியக தரப்புகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறாறகும்.

(அ) மேல் மாகாண வலய மாநகர திட்டமிடல் கருத்திட்ட அலுவலகத்தில் இருந்த கணினி மொணிடர், கெனன் வகையிலான பிரிண்டர், UPS ஒன்று மற்றும் கெனன் வகையிலான பெக்ஸ் இயந்திரம் முறையான அனுமதியின்றி கருத்திட்டம் முடிவுறுத்திய பின்னர் முன்னாள் கருத்தட்ட தலைவரால் கொண்டு செல்லப்பட்டிருந்தது. அது தொடர்பாக அமைச்சினால் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) மேல் மாகாண வலய மாநகர திட்டங்களை மேற்கொள்ளும் கருத்திட்டத்திம் பொருட்டு ரூபா. 8.75 மில்லியன் பெறுமதியிலான அலுவலக உபரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கருத்திட்டத்தால் பேணிச் சென்றிருந்த நிலையான சொத்துக்களின் விபரங்கள்படி இந்த அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா. 6.03 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி கொள்வனவு செய்திருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 2.72 மில்லியன் குறைவாக நிலையான சொத்துக்கள் விபரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.6 கடப்பாடுகளும் பொறுப்புகளும்

வருடாந்த வரவு செலவு திட்ட எல்லைகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ளுதல்.

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 02 (அ) பந்திக்கு முரணாக 09 விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த ரூபா. 6,131.87 மில்லியன் ஒதுக்கீடுகளிலிருந்து பயன்படுத்திய பின்னர் விஞ்சிய ரூபா. 450.88 மில்லியன் தொகையினை கடந்து ரூபா. 2,349. 24 மில்லியன் தொகையிலான பொறுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது வெளிப்படுத்திக்கொண்ட நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) இலங்கை அரசாங்கம் மற்றும் உலக வங்கியால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கொழும்பு தலைநகரம் சாரந்து வெள்ளம் ஏற்பட்ட பின்னர் இயல்பு நிலைக்கு வருகின்ற நகர சூழல் பொருட்டான பொறுப்பு நிதியத்தின் பொருட்டு 900,000 ஐ.அமெ.டொலர் அல்லது இலங்கை ரூபா. 118.8 மில்லியன் தொகையிலான அளிப்புகள் கிடைக்கப்பெற்றிருந்தன. இந்த நிதியம் 2012 ஆம் ஆண்டு தொடக்கம்

நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதியில் முடிவுறுத்துவதற்கு உரியதாக இருந்தது. அத் திகதியில் பின்னர் 2017 ஆம் ஆண்டு சனவரி 31 ஆந் திகதி வரை 02 சந்தர்ப்பங்களில் 02½ ஆண்டுகளில் பொறுப்பு நிதியத்தின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும், அந்தக் காலப் பகுதியில் பொறுப்பு நிதியத்தின் பணம் உபயோகப்படுத்துவதற்கு தவறியமை காரணமாக 172,926.58 ஐ.அம.டொலர் அல்லது இலங்கை ரூபா 26.55 மில்லியன் தொகை இலங்கை வங்கியிடம் மீள அனுப்பப்பட்டிருந்தது. இதனால் இலங்கை அரசாங்கத்தறிகு அந்நியச் செலாவணி நட்டம் ஏற்பட்டது.

(ஆ) கொட்டாவ, கடுவளை, கடவத்தை நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு Township Development Component (3K கருத்திட்டத்தில்) இணைக்கப்பட்டிருந்த அலுவலர்களை பிழையாக கணக்கிடப்பட்டு ரூபா.1.90 மில்லியன் சம்பளம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் பணிற்றொகுதியிடமிருந்து மீண்டும் அவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையால் அரசாங்கத்திற்கு நிதிசார் நட்டம் ஏற்பட்டது.

(இ) அமைச்சு செயலாளரின் சாரதியாக வேறு இணைந்த நிறுவனமொன்றில் சாரதியை சேவையில் ஈடபடுத்தப்பட்டிருந்துதுடன், குறித்த சாரதிக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக முறையான அனுமதியின்றி மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா. 423,583 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

**2.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தினக்கீழ் காலி கோட்டை புனரமைக்கும் பணியின்போது ஆரம்ப ஆய்வு மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளாது ஆலோசகர்களால் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக குறித்த அறிக்கை அடிப்படையாகக்கொண்டு எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும், அந்த அறிக்கைகளை தயாரிப்பதற்கு ஆலோசகர்களுக்கு ரூபா.60 மில்லியன் பயனற்ற செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) திருகோணமலை மாவட்ட பாரிய திட்டம் தயாரிக்கும் கருத்திட்டத்தில், கருத்திட்ட கூட்டிணைப்பாளரால் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற கள கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஹெலிகொப்டர் விமானம் பயன்படுத்தப்பட்டிருந்தது. குறித்த விமானப் பயணத்திற்கும், தங்குமிட, உணவு பானங்கள் மற்றும் மதுபானங்கள் பொருட்டு திறைசேரி ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா.101,622 பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.9 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

அமைச்சிற்கு ஏற்புடையதான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காட்டிய குறைப்பாடுகள் தொடர்பாக அமைச்சினால் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் செவ்வையாக்கப்படாத பந்திகளின் தொடர் பின்வருமாறாகும்.

| கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையின் தொடர் | | தொடர்புடைய விடயம் |
| --- | --- | --- |
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2016 | 3.5 (ஆ) | முழு நேர மற்றும் பகுதி நேரம் என்ற வகையில் கருத்திட்ட கடமைகளின் பொருட்டு விடுவிக்கப்பட்டிருந்த |

|  |  |  |
|---|---|---|
|  |  | பணிற்றொகுதியினறுக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 5% மற்றும் 15% என்ற வகையில் விசேட கொடுப்பனவு உரித்தற்ற போதும் கொழும்பு தலைநகரம் சார்ந்து நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு பகுதிநேரத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த பணிற்றொகுதியினறுக்கு பிழையாக கொடுப்பனவுகள் மேற்கொண்டிருந்த மொத்தம் ரூபா.10.83 மில்லியன் கொடுப்பனவுகளை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| 2016 | 3.9 (அ) | கொழும்பு தலைநகரம் சார்ந்து நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் முன்னாள் கருத்திட்ட பணிப்பாளர் அப்போதைய அமைச்சின் மேலதிக செயலாளராக (தொழில்நுட்பம்) நடவடிக்கை மேற்கொண்டு தமது சம்பளத்திற்கு எரிபொருள் படி பெற்றுக்கொள்வதுடன், அவர் கருத்திட்ட முகாமையாளராக இருந்த காலப்பகுதிக்கு முறையான அனுமதியின்றியும் சுற்றுநிருபத்திற்கு புறம்பாகவும் ரூபா.1,243,380 பெறுமதியிலான எரிபொருள் லிற்றர் 10,812 இற்கான இரசீதுகளை கருத்திட்டம்மூலம் மீளளிப்புச் செய்திருந்ததுடன், குறித்த பணத்தொகையினை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2.10 முகாமைத்துவ குறைப்பாடுகள்

முறையானவாறு இடர் முகாமைத்துவ நிலையத்தில் உத்தியோகத்தர்கள் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளாது குறித்த நிறுவனங்களால் மேற்கொள்கின்ற பணிகளையெ நிறைவேற்றுவதற்கு, வெள்ளப்பெருக்கு கட்டுப்பாடு மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ நிலையத்திற்காக 12 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை கிரிமண்டல மாவத்தையில் நிருமாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுடன் முரண்படும் நிலைமைக்குள் மதிப்பீட்டு செலவு ரூபா 1,892.68 மில்லியன் தொகை நிருமாணிப்பு பணிகளின் பொருட்டு மத்திய பொறியியல் பணியகத்துடன், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு தூண்கள் நிருமாணித்தல் (Pilling) மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் வெள்ளப்பெருக்கு கட்டுப்பாடு மற்றும் நீர் வளமுகாமைத்துவம் நிலையம் நிருமாணித்தல் தேவையற்றதென அவதானிக்கப்பட்டது. அந்த நிலைமைய கவனத்தில் கொள்ளாது கட்டிடங்கள் நிருமாணித்தலை ஆரம்பிக்கப்பட்டமையால் அந்தக் கட்டிடம் வேறு அலுவல்களின் பொருட்டு பயன்படுத்த வேண்டி ஏற்பட்டதுடன், திறைசேரி பணத் தொகையினை ஏனைய அத்தியாவசிய அலுவல்களின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு இருந்த வாய்ப்பும் இல்லாது போயுள்ளது.

## 2.11 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவறத்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தல்

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் 03 ஆண்டு காலப்பகுதியில் அமைச்சிடம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகள், உபயோகம் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | சேமிப்பு | சேமிப்பு தேறிய ஒதுக்கீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2015 | மீண்டுவரும் | 478 | 459 | 19 | 3.97 |
| | மூலதனம் | 17,538 | 6,979 | 10,559 | 60.21 |
| | **மொத்தம்** | **18,016** | **7,438** | **10,578** | **58.71** |
| 2016 | மீண்டுவரும் | 1,066 | 750 | 316 | 29.64 |
| | மூலதனம் | 29,094 | 12,401 | 16,693 | 57.38 |
| | மொத்தம் | **30,160** | **13,151** | **17,009** | **56.40** |
| 2017 | மீண்டுவரும் | 2,553 | 2,527 | 26 | 1.02 |
| | மூலதனம் | 37,289 | 27,254 | 10,035 | 26.91 |
| | மொத்தம் | **39,842** | **29,781** | **10,061** | **25.25** |

மீளாய்வாண்டிற்கான ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகள் மற்றும் உபயோகம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தாமை**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 09 செலவு விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த ரூபா. 1,991.5 மில்லியன் தொகையிலான தேறிய ஒதுக்கீடு எதுவித உபயோகமின்றி மொத்த ஒதுக்கீடும் எஞ்சியிருந்தது.

(ii). அமைச்சின்கீழ் நடைமுறைப்படும் ''சுகித்த புரவர'' கருத்திட்டம் மற்றும் 09 மாகாணங்களில் நகர அபிவிருத்தி கருத்திட்டம் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் பல்வேறு 06 கருத்திட்டங்ளுக்கு ரூபா. 202.02 மில்லியன் தொகையிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் குறித்த கருத்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

(iii). மீளாய்விற்கான ஆண்டில் நகர அபிவிருத்தி மற்றும் நகர திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பொருட்டு ரூபா. 1,000 மில்லியன் ஒதுக்கீடும், குறைநிரப்பு மதிப்பீடுகள் ஒதுக்கீடு செய்வதன்மூலம் ரூபா. 7,895.9 மில்லியன் ஒதுக்கீடும் என்ற வகையில் மொத்தம் ரூபா. 8,895.9 மில்லியன் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அதில் ரூபா. 3,040.56 மில்லியன் உபயோகப்படுத்தாது எஞ்சியிருந்தது.

(iv). நகர அபிவிருத்தி மற்றும் நகர திண்ம கழிவுப் பொருட்களின் முகாமைத்துவம் பொருட்டு கடந்த ஆண்டிலும் மீளாய்விற்கான ஆண்டிலும் குறைநிரப்பு மதிப்பீடுகள்மூலம் ஒழுங்குமுறையாக ரூபா. 3,330.8 மில்லியன் தொகையும், ரூபா. 8,895.9 மில்லியன் தொகையும், என்ற வகையில்

மொத்தம் ரூபா. 12,226.7 மில்லியன் ஆன தேறிய ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் கடந்த ஆண்டிலும் மீளாய்விற்கான ஆண்டிலும் அந்தப் பணிகளின் பொருட்டு மொத்தம் ரூபா. 9,186.14 மில்லியன் தொகை மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேல் மாகாணத்தின் முதன்மையானதும் அவசரமானதுமான திண்ம கழிவுப் பொருட் முகாமைத்துவத்திற்கான கருத்திட்டம் அவசர கருத்திட்டமாக கவனத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மிகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருத்தல்

07 செலவு விடயங்களின் மொத்தம் ரூபா. 3326.8 மில்லியன் தொகையிலான மிகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருத்தல் காரணமாக அந்த செலவு விடயத்திற்கு ஏற்புடையதான ஒதுக்கீடுகளில் மொத்தம் ரூபா.840.4 மில்லியன் மட்டும் உபயோகப்படுத்தியமையால் மீதி, ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடுகளில் 52 % தொடக்கம் 98 % வரையிலான எல்லையைக் கொண்டிருந்தது.

## 2.12 இணங்கியொழுகாமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள்,விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தொடர் | பெறுமதி<br>ரூபா. | இணங்காமை |
|---|---|---|
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| செயலாளர்களின் பிரமாணக் குறிப்பில் (ஆ) உப அட்டவணையில் பந்தி 03 | 2,306,255 | அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சம்பளம் செலுத்துகையில், செயலாளர் களின் பிரமாணக் குறிப்பின் ஒதுக் -கீடுகளை கவனத்தில் கொள்ளாது, அமைச்சரவை அனுமதியின்றி அமைச்சின் செயலாளர் பதவிக்கு குறைந்த, பொறியியல் அலுவல்கள் தொடர்பான மத்திய ஆலோசகர் பணியகத்தின் பொறியியலாளர் ஒருவரின் சம்பளம் மற்றும் அந்த நிறுவனத்திற்கு உரியதான பல கொடுப்பனவுகளை 2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் தொடக்கம் முறையின்றி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | | |
| (i) 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 மற்றும் 05 ஆவது பந்திகள் | 190,000 | முன்னாள் மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி) ஏற்புடைய சுற்றறிக்கை பிரகாரம் தமது தனிப்பட்ட மோட்டார் வண்டியை கடமைகளின் பொருட்டு பயன்படுத்துவதற்கு மாதாந்தம் ரூபா.50,000 ஆன போக்குவரத்து |

| | |
|---|---|
| | கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. கொழும்பு தலைநகரம் நகர அபிவிருத்தி கருத்திட்டத்தில் வாகனமொன்று 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு மே மாதம் வரை முழுநேர காலத்திற்கு தமது கடமைகள் மற்றும் தனிப்பட்ட பயணங்களின் பொருட்டு பயன்படுத்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதுடன், அவரால் அதனை ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய காலப் பகுதிக்குள் பெற்றுக்கொண்டிருந்த ரூபா.340,000 ஆன போக்குவரத்து கொடுப்பனவில் ரூபா.150,000 ஐ மட்டும் மீண்டும் அரசாங்கத்திடம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூபா.190,000 ஐ அரசாங்கத்திடம் செலுத்தப்படவில்லை. |
| (ii) 2016 மார்ச் 09 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க 406,580 சுற்றறிக்கையில் 2 (III) , (IV) பந்திகள் | முன்னாள் மேலதிக செயலாளரால் (நகர அபிவிருத்தி) தமது பதவிக்கான எரிபொருள் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதுடன், கொழும்பு தலைநகரம் சார்ந்து நகர அபிவிருத்தி கருத்திட்டத்தில் தமது உத்தியோகபூர்வ வாகனத்திற்கு ரூபா.317,350 பெருமதியிலான எரிபொருள் லீற்றர் 2,885 ம் மற்றும் மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தில் ரூபா.147,730 பெறுமதியிலான எரிபொருள் லிற்றர் 1,343 ம் பெற்றுக்கொள்ள ப்பட்டிருந்தது. |
| (iii) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய-09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | எல்லா அரச அலுவலர்களும் தமது சேவை நிலையத்தில் வருகை வெளியேறல் தொடர்பாக விரல் அடையாள இயந்திரம்மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். ஆயினும், முன்னாள் மேலதிக செயலாளரால் (நகர அபிவிருத்தி) எந்தவொரு திகதியிலும் வருகை மற்றும் வெளியேறல் குறிப்புகளை வைப்பதற்கு விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தியிருக்கவில்லை. |

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட பணியாற்றொகுதி, உண்மையான பணியாற்றொகுதி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு**

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிட பணியாற்றொகுதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். (அமைச்சின் கீழ் உள்ள கருத்திட்டங்களில் பணியாற்றொகுதி இதற்குள் உள்ளடக்கப்படவில்லை) மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு அமைச்சினால் ஆளுக்குரிய வேதனாதிகளின் பொருட்டு ரூபா.77.09 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் படி தனியாள் செலவு ரூபா. 720,477 ஆக இருந்தது.

| | ஊழியர் தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி | உண்மையான பணியாற்றொகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஆரம்ப மட்டம் | 36 | 31 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 06 | 02 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 95 | 37 | 58 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 44 | 37 | 07 |
| | மொத்தம் | 181 | 107 | 74 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அமைச்சின்கீழ் நடைமுறைப்படுகின்ற பல்வேறு கருத்திட்டங்களின் பொருட்டு முறையான ஆட்சேர்ப்புத் திட்டங்களை பின்பற்றாது ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சீனா முதலீடுகளின் மூலம் மேற்கொள்கின்ற நிதிசார் நகர கருத்திட்டம் (துறைமுக நகர கருத்திட்டம்) பொருட்டு பணியாற்றொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்கையில், 05 மேலதிக கருத்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் 02 உதவி கருத்திட்டப் பணிப்பாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். அதற்காக முறையான ஆட்சேர்ப்புத் திட்டம் பின்பற்றப்படவில்லை. அதேபோன்று இலங்கை துறைமுக அதிகார சபையின் பூரணகால ஹாபர் மாஸ்டர் என்ற பதவியில் பணியாற்றும் அலுவலரொருவர் வேறு பதவியில் சேவையாற்றுவதற்குள்ள ஆற்றல் தொடர்பாக கண்டறியாது குறித்த அலுவலரும் பிரதி கருத்திட்ட பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. அதேபோன்று அமைச்சின் மேலதிக செயலாளர், பிரதி கருத்திட்ட பணிப்பாளராகவும், மேலும் இரண்டு அலுவலர்கள் உதவி கருத்திட்ட பணிப்பாளர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பினும், அவர்கள் அந்த கருத்திட்டத்தில் எதுவித கடமைகளையும் நிறைவேற்றியிருக்கவில்லை.

(இ) அமைச்சின்கீழ் நடைமுறைப்படும் இலகு ரயில் போக்குவரத்து முறைமை (Light Rail Transit Project) கருத்திட்ட முகாமையாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்கையில் பதவிகளின் பொருட்டு விண்ணப்பம் செய்வதற்கு வேலை செய்யும் 05 நாட்கள் போன்ற மிக சிறிய காலம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்த கருத்திட்டத்தின் பொருட்டு அப்போது ஜயிகா நிறுவனத்தால் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவசரமாக பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் தேவையிருக்கவில்லை. அதேபோன்று பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோருகையில்

போக்குவரத்து மற்றும் இயந்திர பொறியியலாளர் துறையில் நல்ல அறிவும், அனுபவமுள்ள பட்டநிலைப் பின்படிப்புடன்கூடிய தொழில்வாண்மையாளர்களிடத்தில் விண்ணப்பங்கள் கோரியிருக்கவில்லை.